**செய்தி வெளியீடு எண்: 156** **நாள்: 02.03.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 1.3.2018 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மைத் துறை சார்பில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 16 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர் விடுதி, பண்ணை அலுவலகக் கட்டடம், அலுவலர் குடியிருப்புகள், கிடங்குகள், வளாகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது உபயோக கட்டடங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 49 கோடியே 68 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைத் துறை கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாக விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக, வேளாண்மைக் கல்வி, வேளாண்மை ஆராய்ச்சி, வேளாண்மை விரிவாக்கக் கல்வி, வேளாண்மை வணிக மேம்பாடு, வேளாண்மை கொள்கை ஆதரவு மற்றும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி மூலமாக இளைஞர்களின் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் வேளாண் வணிகம் குறித்த வேளாண்மை செயல்திறனை மேம்படுத்துவது போன்ற பணிகளை செயல்படுத்தி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பணியினை மேலும் செம்மைப்படுத்திடும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 16 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள், பண்ணை அலுவலகக் கட்டடம், விதை செயலாக்க ஆய்வகம், உணவகம், அலுவலர் மற்றும் இயக்குநர் குடியிருப்புகள், மருத்துவமனை, விருந்தினர் விடுதி, விதை கிடங்கு, தோட்டக்கலைத் துறை ஆய்வகம், விளையாட்டு மைதானம், சாலை வசதி, சுற்றுச்சுவர் உள்ளிட்ட வளாக உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை காணொலிக்

காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் 33 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர் விடுதி, பண்ணை அலுவலகக் கட்டடம், அலுவலர் குடியிருப்புகள், கிடங்குகள், வளாகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது உபயோக கட்டடங்கள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில் மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 5 கோடியே 77 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதி மற்றும் நவீன சமையல் கூடத்துடன் கூடிய உணவக கட்டடம்;

கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் 3 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன சமையல் கூடம் மற்றும் உணவக கட்டடம்; மதுரையில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மாணவர்கள் வசதி மையம், நவீன சமையல் கூடம் மற்றும் உணவக கட்டடம்;

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலமாக, விவசாயிகளுக்கு அதிக இலாபம் தரும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி குறித்த தொழில்நுட்பங்களை பயிற்றுவிக்கவும், தரமான இடுபொருட்கள் மற்றும் விரிவாக்க சேவைகளை வழங்கிடும் வகையிலும், விழுப்புரம் மாவட்டம், சாலாமேட்டில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தோட்டக்கலை தகவல் மற்றும் பயிற்சி மையக் கட்டடம்;

நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பட்டு நிதியின் கீழ், புதுக்கோட்டை மாவட்டம், இராஜேந்திரபுரத்தில், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பரிவர்த்தனைக் கூடம், 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, 2 உலர்களங்கள், 2 சூரிய

உலர்த்திகள், 10 வணிகர் கடைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள தேங்காய் வணிக வளாகம்;

என மொத்தம், 66 கோடியே 61 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் திரு.சு.ஜ.சிரு. இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் கே. இராமசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**
**நாள்: 2.3.2018**